# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.09/2024**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | சூப்பர்வைசர், அமேசான் |
| பெயர் | - | பபிதா | வட்டம் | - | கோயம்புத்தூர் |
| க/பெ | - | ரகுநாத் | சமயம் | - | |
| கிராமம் | - | கோயம்புத்தூர் | வயது | - | 29/2025 |
| சாதி | - | | | | |

**26-11-2025**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 311-ன் கீழான மனு E-Crl.M.P.No.941/2025-ல் அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார். )

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் புகார் கொடுத்த பின்பு என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் புகார் கொடுத்த அன்று போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் எனது தாயார் மல்லிகா எங்கு குடியிருந்தார் என்றால் ஊமையாண்டி முடக்கில் குடியிருந்தார். சம்பவநாளன்று எனது தாயார் வீட்டில் இருந்து சம்பவயிடத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. வேலை பார்க்கும் இடத்தில் இருந்து வந்தார். எங்கு வேலை பார்க்கிறார் என்றால் வாட்டர்பால்ஸ் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார். நான் அழைத்த பின்பு எவ்வளவு நேரம் கழித்து எனது தாயார்சம்பவயிடத்திற்கு வந்தார் என்றால் அரை மணி நேரத்திற்கு பின்பு வந்தார். எனது தாயாருடன் வேறு யார் வந்தது என்றால் எனது தாய்மாமா மகன் மணிகண்டன் என்பவர் வந்தார். பள்ளியில் இருந்து காடம்பாறை காவல் நிலையம் 100 அடி துாரம் இருக்கும் என்றால் சரிதான். நடந்து சென்றால் ஒரு நிமிடத்தில் காவல் நிலையம் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எனது தாயார் வரும் போது காவல் நிலையம் கடந்து தான் வர வேண்டும் என்றால் சரிதான். எனது மாமா மணிகண்டனும், தாயாரும் வந்த பின்பு 45

நிமிடம் கழித்து பின்பு தான் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். 3 பேரும் சேர்ந்து ஆலோசனை செய்த பின்பு காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். புகார் பள்ளியில் வைத்து எழுதினோமா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினோம். காவல் நிலையம் சென்று வாய்மொழியில் தான் புகார் சொன்னேனா என்றால் ஆமாம். நான் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் ஆமாம். அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் கையொப்பம் வாங்கினார்கள். தலைமைக்காவலர் ராஜன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகாரை யார் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றால் யாரும் சொல்லவில்லை. நானாக தான் நடந்ததை எழுதிக்கொடுத்தேன். புகார் 20.03.2024-ம் தேதி கொடுத்தேன் என்றால் சரிதான். 20.06.2024-ம் தேதி நான் புகார் கொடுத்தேனா என்றால் சொந்த பிரச்சனை காரணமாக காவல் நிலையத்தில் நிறைய புகார்கள் கொடுத்துள்ளேன். எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் 20.06.2024 என உள்ளது என்றால் 03 என்பது அடித்து 06 என உள்ளது. காவல் நிலையத்தில் எனது மாமாவிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். சாதாரணமாக நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் தமிழில் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அது என்னுடைய கையொப்பம் தான். பதட்டத்தில் நான் தமிழில் கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்தார்களா என்றால் அழைத்து வந்தார்கள். நான் புகார் கொடுத்த பின்பு எவ்வளவு நேரம் கழித்து எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்தார்கள் என்றால் கால் மணி நேரத்தில் அழைத்து வந்தார்கள். எதிரியை அழைத்து வந்த பின்பு தான் என்னிடம் போலீசார் புகார் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் புகார் கொடுத்த பின்பு தான் எதிரியை அழைத்து வந்தார்கள். அந்த பள்ளியில் வேலை செய்யும் தேவி என்ற ஆசிரியர் எனது உறவினாரா என்றால் இல்லை. எனக்கு தெரிந்தவர் என்றால் ஆமாம். அந்த பள்ளியில் பெற்றோர், ஆசிரியர் மேலாண்மை குழு உள்ளது என்றால் சரிதான். என்னை போன்றே பேச்சியம்மாள் என்பவரும் எஸ்கார்டாக அந்த பள்ளியில் இருந்தார் என்றால் 3 பேர் இருந்தார்கள் அதில் கண்ணன் என்பவரை தவிர மற்றவர்கள் பெயர்கள் தெரியாது. பெற்றோர், ஆசிரியர் மேலாண்மை குழுவின் பரிந்துரையின் பேரில் மாவட்ட கல்வி அலுவலர் என்னை பணிநியமனம் செய்தாரா என்றால் இல்லை. எனக்கு தெரிந்த ரமேஷ் என்பவர் எதிரியை பார்க்க சொன்னார். நான் அவரை பார்த்து வேலை வேண்டும் என்று கேட்டேன். ஒரு கடிதம் எழுதி தர கூறினார். நான் கடிதம் எழுதிக்கொடுத்து அங்கு வேலை பார்க்க தொடங்கினேன். தலைமை ஆசிரியர் என்னை பணிநியமனம் செய்ததற்கான உத்தரவு வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. தலைமை ஆசிரியர் என்னை பணிநியமனம் செய்யவில்லை என்றாலும், உள்நோக்கத்தோடு தலைமை ஆசிரியர் பணிநியமனம் செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை மாவட்ட கல்வி அலுவலர் எஸ்கார்டு பணிக்காக பணிநியமனம் செய்தார் என்றால் மாவட்ட கல்வி அலுவலர் பணிநியமனம் செய்யவில்லை. ஆஜர் எதிரி தான் என்னை எஸ்கார்டு பணிக்காக பணிநியமனம் செய்தார். எனக்கு பள்ளியில் எஸ்கார்டு பணி மட்டும் தான் என்றால் சரிதான். (சாட்சி மீண்டும் நான் கம்யூட்டர் பணியும்

செய்தேன் என்று கூறினார். ) எனக்கு எஸ்கார்டு பணிக்கு மட்டும் தான் ஊதியம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பள்ளியில் கம்ப்யூட்டர் பணி வழங்கவில்லை என்றாலும், நான் வழங்கியதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.03.2024-ம் தேதி நான் தலைமை ஆசிரியர் அறைக்கு கம்ப்யூட்டர் பணியோ, பிரிண்ட் எடுக்கவோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கம்ப்யூட்டர் பணி வழங்கப்படாததால் நான் அந்த அறைக்கு செல்லவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் 20.03.2024-ம்தேதி தலைமை ஆசிரியர் அறையில் கம்ப்யூட்டர் பணி பார்த்து பிரிண்ட் எடுத்ததாக சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்பு போலீசார் சம்பவயிடத்திற்கு சென்றார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு எஸ்கார்டு பணிக்கு மாத சம்பளம் ரூ.6000/-ம் என்றால் சரிதான். மாதம் மாதம் எனக்கு சம்பளம் கிடைக்காது என்றாலும், 3 மாதத்திற்கு ஒருமுறை, 4 மாதத்திற்கு ஒரு முறை தான் சம்பளம் கிடைக்கும் என்றாலும் சரிதான். சம்பளம் எனக்கு சரியாக கிடைக்காததால் எனது குடும்ப செலவிற்காக அங்கு பணிபுரியும் ஆசிரியர்களிடம் கைமாற்றுக்கடன் வாங்குவேன் என்றால் இல்லை. நான் கைமாற்றுக்கடன் வாங்கி திருப்பிக்கொடுப்பது வழக்கம் என்றாலும், தற்போது இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2024-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எதிரியிடம் நான் ரூ.4000/-ம் கைமாற்றுக்கடன் வாங்கியிருந்தேன் என்றால் இல்லை. நான் எதிரியிடம் வாங்கிய ரூ.4000/-ம் கைமாற்றுக்கடனை 01.02.2024-ம் தேதி Gpay மூலம் எதிரிக்கு திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் இல்லை. வால்பாறை இந்தியன் வங்கியில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். pabi pabitha என்பது எனது Email முகவரி என்றால் சரிதான். எனது இந்தியன் வங்கி கணக்கில் இருந்து எதிரிக்கு Gpay மூலம் நான் ரூ.4000/-ம் அனுப்பியுள்ளேன் என்றால் நான் மிகுந்த மனஅழுத்தத்தில் இருப்பதால் எனக்கு சரியாக நினைவு கூற இயலவில்லை.நான் அந்த பள்ளியில் B.Ed பயிற்சிக்காக சென்றிருந்த போது, B.Ed முடித்த மாணவிகளை நினைவிருக்கும் படி ஏதாவது செய்யுங்கள் என்று எதிரி கூறியதால் மற்ற மாணவிகளும் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பிய ரூ.4000/-த்தை நான் எதிரி கணக்கிற்கு அனுப்பினேன். நான் எதிரியிடம் கடன் வாங்கிய தொகை தான் திருப்பிக்கொடுத்துள்ளேன் என்றாலும், தற்போது, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 01.02.2024-ம் தேதிக்கு பின்பு நான் அவசர தேவைக்கு எதிரியிடம் ரூ.10,000/- கடனாக கேட்டேன் என்றால் இல்லை. நான் கடன் கேட்ட சமயத்தில் எதிரி மொத்தமாக ரூ.10,000/-ம் கொடுக்க இயலாது என்று சொல்லி 18.02.2024-ம் தேதி ரூ.5000/-மும், 26.02.2024-ம் தேதி ரூ.1000/-மும், 29.02.2024-ம் தேதி ரூ.1000/-மும் Gpay மூலமாக எனது வங்கி கணக்கிற்கு அனுப்பினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அப்படியே அவர் அனுப்பியிருந்தாலும் பள்ளியில் உள்ள வேலைகளுக்காக அனுப்பியிருப்பார். எனக்கு கடனாக நான் அவரிடம் எந்த பணமும் வாங்கவில்லை. 29.02.2024-ம் தேதி வரை நான் எதிரிக்கு ரூ.7000/-ம் வரை கடன் திருப்பி செலுத்த வேண்டியிருந்தது என்றால் சரியல்ல. அந்த கடன் தொகையை திரும்ப எதிரி கேட்டதால் எனக்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு வந்தது என்றால் சரியல்ல. 20.03.2024-ம் தேதி காலை என்னிடம் அந்த பணத்தை திருப்பி கேட்டார் என்றால் சரியல்ல. இதனால் எதிரி மீது நான் தீவிர பகை கொண்டு எனது அம்மாவை வர வைத்து

ஆலோசனை செய்து, எதிரிக்கு எதிராக தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 20.03.2024-ம் தேதி நான் தலைமை ஆசிரியர் அறைக்கு சென்று கம்ப்யூட்டர் வேலை செய்யவில்லை என்றாலும், பிரிண்ட் எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 20.03.2024-ம் தேதி தலைமை ஆசிரியர் அறையில் நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும் எதிரி மீது தவறாக புகார் கொடுத்து நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** :

1. புகாரில் 20.03.2024- என உள்ளதை 03 என்பதை யார் திருத்தியது என்றால் நான் புகார் கொடுக்கும் போது 20.03.2024-ம் என்று தான் கொடுத்தேன். அதை யார் திருத்தியது என்று எனக்கு தெரியாது.

**மறுகுறுக்கு விசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.